# மங்களசாமி மாலை

## (நல்லொழுக்கச் செய்யுள் தொகுப்பு நூல்)

### சா. மாணிக்கவாசகம் & சா. சம்பந்தம்

**mangkalacAmi mAlai**

**compiled with notes by cA. mAnikkavAcakam**

**& cA. campantam**

**In tamil script, unicode/utf-8 format**

Acknowledgements:

Our Sincere thanks go to the authors S. Manickavacakam and S. Sampandam for providing a softcopy of this work and for permissions to include this work as part of the Project Madurai e-text collections.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

© Project Madurai, 1998-2019.

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.

Details of Project Madurai are available at the website

http://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

## மங்களசாமி மாலை

## (நல்லொழுக்கச் செய்யுள் தொகுப்பு நூல்)

**சா.மாணிக்கவாசகம் & சா. சம்பந்தம்**

Source:

மங்களசாமி மாலை

(நல்லொழுக்கச் செய்யுள் தொகுப்பு நூல்)

மேஜர். சா.மாணிக்கவாசகம் & நல்லாசிரியர். சா. சம்பந்தம்,

நூல் கிடைக்குமிடம் : S. சம்பந்தம் 2, அந்தோணியார் நகர், புதுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்-613005.

கணினி தட்டச்சு : S.Edwinraj, Seelink Cafe, Pudukkottai Road, Thanjavur - 613 005; Bhuvaneswari Computers, Thanjavur - 613 001.

முதற்பதிப்பு : செப்டம்பர் 2018

நூலின் பெயர் : மங்களசாமி மாலை

உரிமை : பதிப்பாசிரியர் : ஆசிரியர்களுக்கு சா. மாணிக்கவாசகம் சா. சம்பந்தம்

குறிப்பு : இலவசம், விற்பனைக்கு அல்ல.

We acknowledge with gratitude, "The Rotary Club of Madras Centenary Commemoration" for undertaking to sponsor this booklet.

-----

## முன்னுரை

வாழ்க்கைப்பயணத்தில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரிடமிருந்து வெவ்வேறு சூழ்நிலையில் நமக்கு நிறைய அனுபவங்கள், பட்டறிவு கிடைக்கிறது. இக்கருத்துக்களுக்கு ஏற்ப, தமிழ் இலக்கிய நூல்களிலிருந்து முக்கியமான பாடல்களையும், குறள்களையும் தொகுத்து, அவற்றை புத்தக வடிவில் வெளியிட விரும்பினோம். இப்புத்தகம் மாணவ, மாணவிகளுக்கும், பெற்றோர்களுக்கும் பயன்பட வேண்டும் என்பது எங்களது விருப்பம்.

தனிமனித சிந்தனை, ஒழுக்கம், கட்டுப்பாடு நன்றாக இருந்தால், வீடும், நாடும் நிச்சயம் வளமாகவும், அமைதியாகவும் இருக்கும் என்ற உன்னத கோட்பாட்டினை வலியுறுத்தி

இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடல், குறளுக்கு பதவுரை, தமிழிலும், ஆங்கிலத்திலும் தரப்பட்டுள்ளது.

எங்களது மூதாதையர் இல்லம், மன்னார்குடியில் 104 என்ற கதவு எண்ணைக் கொண்டிருந்தது. அந்த எண் "104" எங்கள் நினைவில் நன்றாக பதிந்துள்ளது. ஆகவே தான் 104 பாடல்களைத் தேர்வு செய்தோம்.

திருக்குறள் நூலுக்கு அறிமுகம் ஏதும் தேவையில்லை. ஆனால் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகளிடையே அதிகமாக தெரியாத சில புத்தகங்களிலிருந்து, சில பாடல்களை தேர்வு செய்துள்ளோம். ஆகவே அப்புத்தகங்களைப் பற்றியும், ஆசிரியரைப் பற்றியும் சில தகவல்கள் பிற்சேர்க்கையாக சேர்க்கப்பட்டு, கடைசியில் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் குறைகள் இருந்தால், அதற்கு நாங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறோம். அக்குறைகளை பொறுத்தருள் வேண்டுகிறோம். தங்களின் மேலான ஆலோசனைகளையும், கருத்துக்களையும் அன்புடன் வரவேற்கிறோம். இந்த புத்தகத்தை வெளியிட உதவியாக இருந்த திரு. S. எட்வின் ராஜ் மற்றும் புவனேஸ்வரி கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்திற்கும், எங்கள் நன்றி!

இந்த புத்தக வெளியீட்டை தங்களுடைய மக்கள் சேவையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டு, அதற்கான உதவியைச் செய்த “ரோட்டரி கிளப் ஆப் மெட்ராஸ் சென்டினரி கமமொரேஷன்” மற்றும் அந்த கிளப்பின் அங்கத்தினர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி!

இப்புத்தகத்தினை எங்கள் தாய், தந்தைக்கு சமர்ப்பணம் செய்கிறோம்.

சா.மாணிக்கவாசகம், சா. சம்பந்தம்

---------------

# PREFACE

In our life's journey we come across a number of people and learn from them a lot. Based on such wide experience and acquired knowledge, we have collected a number of poems from Tamil classics, some popularly known and some not so popular but equally important. We do hope that this collection will enthuse students and others to delve more into the source materials and benefit.

The collection includes poems which lay emphasis on moral values, societal obligations, and the fruits of living a purposeful life.

We are living in a peculiar situation. A generation is growing up where youngsters do not know to write or read Tamil, but only speak a little. The translation in English is targeted mainly to address this problem. Trust this will enthuse them to learn the Tamil language!

Our ancestral home in Mannargudi bears the door number 104. This is etched in our memory. Hence, we selected 104 poems!

Thirukkural needs no introduction. But there are poems selected from books not popular among the general public and students' community. In order to bridge this gap, we have appended a bibiliography, giving broad outlines of the source materials. In addition, we observed there are some words in Tamil which are peculiar to that language, like, ali (aram) which has multiple meanings, depending on the context. Such words are also explained for the benefit of the readers.

Errors and ommissions if any, are incidental and we take the entire responsibility for that.

We thank Mr.S. Edwin Raj and Mr.R.Sankar for helping us to publish this booklet. We also thank the President, the Secretary and all the members of "The Rotary Club of Madras Centenary Commemoration" for undertaking to sponsor this booklet.

This compilation is a humble tribute to our parents.

S. Manickavasagam, S.Sambandam

------------------

## பொருளடக்கம்

1. அம்மா
2. அப்பா
3. அறம்
4. கல்வி
5. மழை
6. உழவுத்தொழில்
7. இல்லறம்
8. உதவி
9. அடக்கம்
10. ஈகை
11. செல்வம்
12. இறப்பு
13. ஊழ்வினை
14. குற்றம்
15. முயற்சி
16. உறவு
17. நட்பு
18. பகை
19. பிறப்பு
20. இளமை
21. முதுமை
22. உண்மை
23. பொய்
24. நல்லவை
25. தீயவை
26. பெருமை
27. சிறுமை
28. உலகம்

-----------------------

## 1. அம்மா (Mother)

1. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

- திருக்குறள் - 69

பதவுரை : ஒரு தாய், தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப்பிறர் சொல்லக் கேள்வியுற்றபோது தான், அந்த மகனை பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியை விடப்பெரிதும் மகிழ்ச்சி அடைவார்.

A mother's joy will exceed the happiness she experi enced at the time of son's birth, when she learns that he is recognized as a scholar by learned persons.

2. நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா ஆங்கு இன்னா
ஈன்றாளை யோம்பா விடல்.

- கபிலர்-இன்னா நாற்பது - 17

பதவுரை : துன்பங்களை பொறுத்து, மனதை அடக்கி வாழ மாட்டாதவர் நோன்பு நோற்றல் துன்பமாகும்; அவ்வாறே பெற்ற தாயை பராமரிக்காமல் விடுதல் நன்மை பயப்பதில்லை .

Observance of religious) rituals without taking care of one's mother will not yield any benefit.

3. ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

- திருக்குறள் - 656

பதவுரை : தன்னை பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும், சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவான செயல்களை ஒருவர் செய்யக்கூடாது.

One should not do things which will be condemnable by Scholars, even when his/her mother is starving.

4. அரசன், உவாத்தியான், தாய், தந்தை , தம்முன்,
நிகர் இல் குரவர் இவ் ஐவர்; இவர் இவரைத்
தேவரைப் போலத் தொழுது எழுக! என்பதே
யாவரும் கண்ட நெறி.

- ஆசாரக்கோவை-வெண்பா-16

பதவுரை : அரசன், ஆசிரியர், தாய், தந்தை , தன்னைவிட மூத்தவர், இவர்களை தேவர்களைப் போலக் கருதி வணங்க வேண்டும் என்பதே அனைவருக்கும் பொதுவான நீதி.

King, Teacher, Mother, Father and Elders are to be worshipped and this is applicable to all.

5. கண்ணின் சிறந்த உறுப்பு இல்லை; கொண்டானின்

துன்னிய கேளிர் பிறர் இல்லை; மக்களின்

ஒண்மைய வாய் சான்ற பொருள் இல்லை; ஈன்றாளின்

என்ன கடவுளும் இல்.

- நான்மணிக்கடிகை-வெண்பா-54

பதவுரை : ஒருவனுக்கு கண்ணைப் போன்ற சிறந்த உறுப்பில்லை. குலமகளுக்குக் கணவனைப்போல் நெருங்கிய உறவினர் வேறில்லை. பெற்றோருக்கு மக்களைப்போல் ஒளியுள்ள பொருள்கள் வேறில்லை. குழந்தைகளுக்குத் தாயைப்போல் கடவுள் வேறு ஏதுமில்லை .

Eyes are very important organs of the body; nobody is a better relation than her husband to a wife; children are the crown jewels of the parents, and for children, mother is their God.

6. தந்தை தாய்ப்பேண்.

-- ஔவையார்- ஆத்திச்சூடி-20

பதவுரை : ஒவ்வொருவரும் தங்களின் அம்மா, அப்பாவை உணவு, நல்ல ஆடை கொடுத்து தன்னுடன் நல்ல இல்லத்தில் பராமரித்து வரவேண்டும்.

Everyone should take care of their mother and father by providing food, clothes and shelter for all time to come.

7. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

-- ஔவையார் - கொன்றை வேந்தன் -1

பதவுரை : ஒருவரைப்பெற்ற தாயும், தந்தையும் தெய்வத்திற்குச் சமமானவர்கள்.

Parents are like our gods.

--------------

## 2. அப்பா (Father)

8. தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து

முந்தி யிருப்பச் செயல்.

■ திருக்குறள் - 67

பதவுரை : தன் மகனுக்கு ஒரு தந்தை செய்யத்தக்க நல்லுதவி, கற்றவர் அவையில் தன் மகன் முந்தியிருக்கும் படியாக,
அவனை கல்வியில் மேம்படச் செய்தலாகும்.

A father's primary duty is to facilitate good education to his son, so that he will be among eminent scholars.

9. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.

■ திருக்குறள் - 70

பதவுரை :
ஒரு மகன் தன் தந்தைக்கு செய்யத்தக்க கைம்மாறு, இவனுடைய தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ என்று பிறர் புகழ்ந்து சொல்வது.

A son's aim should be to excel in all walks of life, so that people wonder what a noble father he is!

10. பந்தமில்லாத மனையின் வனப்பின்னா
தந்தையில்லாத புதல்வ னழகின்னா ....

■ கபிலர்- இன்னாநாற்பது, வெண்பா-1

பதவுரை : சுற்றமில்லாத இல்வாழ்க்கைக்கு அழகில்லை. அதுபோல தந்தையில்லாத புதல்வனுக்கு அழகில்லை.

A family life without relatives lacks beauty; fatherless son lacks (guidance) beauty.

11. .. யெஞ்சா விழுச்சீ ரிருமுது மக்களைக்
கண்டெழுதல் காலை யினிது.

■ பூதஞ்சேந்தனார்- இனியவை நாற்பது, வெண்பா-18

பதவுரை : மிக்க சிறப்புடைய தாய் தந்தையரை, காலையில் அவர்கள் இருக்குமிடம் சென்று, பாதங்களில் வீழ்ந்து எழுதல் இனிமையானது.

It is worthy to pay obeisance to parents everyday.

----------

## 3. அறம் (Charity)

12. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

- திருக்குறள் - 77

பதவுரை : எலும்பு இல்லாத உடலுடன் வாழும் புழுவை, வெயில் காய்ந்து வருத்துவது போல், அன்பு இல்லாத உயிரை அறம் - தர்மம் வருத்தும்.

Just like a worm squirms under hot sun, compassionless person will wilt under dharma.

13. அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

- திருக்குறள் - 36

பதவுரை : இளைஞராக உள்ளவர், பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்ய வேண்டும்.
அதுவே இறக்கும் தருவாயில் துணையாகும்.
Never postpone charitable deeds; that alone will give everlasting company, till the end of life.

14. பொருள் உடையான் கண்ணதே, போகம், அறனும்
அருள் உடையான் கண்ணதே ஆகும், அருள் உடையான்
செய்யான் பழி; பாவம் சேரான்; புறமொழியும்
உய்யான்; பிறன் செவிக்கு உய்த்து.

- சிறுபஞ்சமூலம் - வெண்பா -1

பதவுரை : பொருள் உடையவன் இன்பம் அடைவான். அருள் உடையவன் அறம் செய்வான். அத்தகைய அருளுள்ளவன் பழியையும், பாவத்தையும், பிறரை பழிபடக்கூறும் புறமொழிகளைக் கூறுதலையும் செய்ய மாட்டான்.
Richman will get pleasure out of his wealth. Blessed soul will do good things. Such enlightened soul will not talk ill (of others), will not commit sinful acts and will not blame others.

15. அறஞ்செய்பவர்க்கும் அறவழி நோக்கித்
திறந்தெரிந்து செய்தக்கால் செல்வழி நன்றாம்.
புறஞ்செய்ய, செல்வம் பெருகும்; அறஞ்செய்ய
அல்லவை நீங்கிவிடும்.

- மூன்றுறை அரையனார் - பழமொழி நானூறு - வெண்பா-364

பதவுரை : அறம் செய்பவரும், தகுதி உடையவர்களுக்கே அதனைச் செய்வதனால் தான், அறத்தின் பயனை உண்மையாகவே அடைவார்கள். அறம் செய்ய பாவம் நீங்கிவிடும். "அறம் செய்ய அல்லவை நீங்கிவிடும்" என்பது பழமொழி.

One should do good deeds to others (who deserve such help), then only they will get real benefit from such acts of charity. (Do good to others, and bad things will go away from you).

16. ஈதற்குச்செய்க பொருளை! அறநெறி
சேர்தற்குச் செய்க, பெருநூலை - யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லை! இம்மூன்றும்
இருள் உலகம் சேராத ஆறு.

- நல்லாதனார்- திரிகடுகம், வெண்பா - 90

பதவுரை : தான் சேர்த்த பொருளை பிறருக்குக் கொடுத்து உதவுதல், அறநெறியில் வாழ்வதற்கு சிறந்த நூல்களைப் படித்தல், எல்லோரிடத்திலும் அன்பான சொற்களையே பயன் படுத்துதல் - இம்மூன்று செயல்களும், இறந்தபின் நரகத்திற்கு செல்லாமல் தடுக்கக்கூடிய வழிகள்.

Wealth is for charity; for a dharmic life seek the company of good books. Mind your language while talking to others. These three, if followed scrupulously will ensure happy end of life.

17. புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை, இன்னினியே
நின்றான், இருந்தான், கிடந்தான் தன்கேள் அலறச்
சென்றான் எனப்படுதலால்.

- நாலடியார்-வெண்பா -29

பதவுரை : இந்த உலகை வாழ்க்கை, சிறிய புல்நுனி மேல் உள்ள நிலையில்லாத நீர்த்துளி போன்றது என்று எண்ணி, அறச் செயல்களை ஒவ்வொரு நாளும் செய்க. நேற்றுவரை நலமுடன் இருந்தான், இன்று உடல் நலமில்லாமல் கிடந்தான், இப்போது இறந்து விட்டான் என்று தனது சுற்றத்தார் அழுவர் என்ற நினைப்பில், அறச் செயல்களை ஒவ்வொரு நாளும் செய்க.

Do good deeds every day, as if life is like dew on the tip of a grass; so, don't postpone. Life is transient; one who was alive yesterday, may take ill and die today. Therefore, while alive do good deeds.

18. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

- திருக்குறள் - 35

பதவுரை :
பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல், அவற்றை விலக்கி வாழ்வதே அறமாகும்.

It is best to be far away from the four evils, namely jealous, lust, anger and harsh words.

19. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

- திருக்குறள் - 204

பதவுரை : பிறர்க்குத் தீமையைத் தரும் தீயசெயல்களை ஒருவர் மறந்தும் நினைக்கக்கூடாது. நினைத்தால், எண்ணிய -வனுக்குக் கேடு விளையுமாறு அறம் - தர்மம் எண்ணும்.

Never ever think of harming others - if done, you will be harmed by 'dharma' in the same manner.

## 4. கல்வி (Education)

20. கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக.

- திருக்குறள் - 391

பதவுரை : ஒருவர் கற்பதற்குத் தகுந்த நூல்களைக் குற்றமற கற்க வேண்டும், அவ்வாறு கற்றபின், கற்ற கல்வி முறைப்படி வாழ்தல் வேண்டும்.

Learn appropriately all that is required to live unblemished life.

21. ஊணொடு, கூறை, எழுத்தாணி, புத்தகம்

பேணொடும் எண்ணும், எழுத்து, இவை மாணொடு

கேட்டு எழுதி, ஓதி, வாழ்வார்க்கு ஈய்ந்தார்- இம்மையான்

வேட்டு எழுத வாழ்வார், விரிந்து.

- ஏலாதி-வெண்பா-63

பதவுரை :

ஊக்கத்துடன் கற்கும் மாணவர்களுக்கு உணவினையும், உடையையும், எழுத்தாணியும், எழுது பொருள்கள்) நூலும் கொடுத்து உதவுகின்றவர்கள் இப்பிறப்பில் செல்வராய் வாழ்வர்.

Those who supply food, clothes, books and stationery to students will prosper.

22. பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்

மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,

விதையாமை நாறுவ வித்து உள்; மேதைக்கு

உரையாமைச் செல்லும் உணர்வு

- சிறுபஞ்சமூலம் - வெண்பா-20

பதவுரை : பூவாது காய்க்கும் மரம் போல வயதில் இளையவரும், அறிவினால் மூத்தவராவார். பாத்தி கட்டி விதைக்காமலே முளைக்கின்ற விதைபோல, பிறர் சொல்லித் தராமலேயே அறிவுடையவர்களுக்கு அறிவு வளரும்.

Some trees bear fruits without flowering; likewise, even young persons will be taken as matured by their exemplary behaviour. Sometimes seeds sprout informally; likewise, some gain knowledge without formal coaching or guidance.

23. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

- திருக்குறள் - 400

பதவுரை : ஒருவருக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வியைத் தவிர மற்ற பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.
Education is the greatest of all wealth and all other materials, pale in comparison.

24. களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடை நிலத்தோராயினும் கற்றறிந்தோரைத்
தலைநிலத்து வைக்கப்படும்.

- நாலடியார்-வெண்பா-133

பதவுரை : உவர் நிலத்தில் விளையும் உப்பினை சான்றோர், நன்செய் நிலத்தில் விளைந்த நெல் - அரிசி உணவுடன் கலந்து விரும்பிச் சாப்பிடுவார்கள். அதுபோல் கீழ்குடி பிறந்த கற்றவர்களையும், சான்றோர் உயர்குடி மக்களாகக் கருதுவார்கள்.
Salt is obtained from saline water. Scholars will treat it as equivalent to paddy grown in fertile farmland. Similarly, people from low social status, if learned, will be equated with the higher societal people.

25. பத்துக்கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே
வித்துக்குற் றுண்ணா விழுப்ப மிக வினிதே
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலிற் காழினிய தில்.

- பூதஞ்சேதனார் - இனியவை நாற்பது - வெண்பா - 40

பதவுரை : பத்து பொருள் கொடுத்தாயினும் உள்ளூரிலிருந்து வாழ்தல் இனிது. விதைக்கென வைத்துள்ள தானியத்தை உண்ணாத செயல் மிக இனிது. நன்மையுடைய நூல்களை பல நாளும் குறைவில்லாத தெளிவுடன் கற்பதும் இனிது.
The following habits are ideal : 1) Live in your place of birth at any cost. 2) Not consuming seeds meant for sowing. Studying good books to lead better life.

## 5. மழை (Rain)

26. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

- திருக்குறள் - 15

பதவுரை : பெய்யாமல் உலக வாழ்க்கையைக் கெடுக்க வல்லது மழை. மழை இல்லாமல், வளம் கெட்டு கஷ்டப்பட்டவருக்கு துணையாக காக்க வல்லதும் மழையாகும்.

Rain is the elixir of life. It helps people suffering from drought, but excessive rainfall is harmful resulting in deluge.

27. நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

- ஔவையார் - மூதுரை - வெண்பா-10

பதவுரை : வயலில் உள்ள நெற்பயிருக்கு பாய்ச்சப்படும் நீர், அந்த வயலில் உள்ள புல்லுக்கும் பயன்படும். அதுபோல இந்த உலகில் நல்லவர் ஒருவர் இருந்தாலும், அவருக்காகப் பெய்யும் மழை, தீயவர்களுக்கும் பயன்படும். நல்லவர் பெறும் செல்வம், எல்லோருக்கும் பயன்படும்.

Water irrigation for paddy crop allows grass also to grow! Similarly, rain does not discriminate good and bad people. Rain benefits all. In the same way, the wealth earned by a good man helps the poor and the needy.

28. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்.

-- ஔவையார் - கொன்றை வேந்தன் - 82

பதவுரை : இவ்வுலகிற்கு மழைநீர் தேவையான அளவு கிடைக்கா விடில், வறியவர்களுக்கு கிடைக்கும் தானம் குறைந்து விடும்.

Rain is the elixir of life. If there is not rain, there will be no prosperity, and consequently charity will be a casualty.

29. நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

■ திருக்குறள் - 20

பதவுரை : எப்படிப்பட்டவர்களுக்கும் தண்ணீர் இல்லாமல் உலக வாழ்க்கை சரியாக நடைபெறாது, ஏன் என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போய்விடும்.

Life without water is unimaginable. Drought conditions will result in indisciplined and chaotic behaviour of people.

30. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு.

■ திருக்குறள்-211

பதவுரை : இந்த உலகத்தில் உள்ளவர்கள் தமக்கு உதவும் மழைக்கு என்ன கைம்மாறு செய்கிறார்கள்? மழை போன்றவர் செய்யும் உதவிகளுக்கு கைம்மாறு வேண்டாம்.

There are philonthrophists in the world who serve the society without expecting anything in return, just like rain.

## 6. உழவுத்தொழில் (Farming)

31. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

■ திருக்குறள் - 1033

பதவுரை : உழவுத்தொழில் செய்து அதனால் கிடைத்ததை உண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர். மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.

Farmers (because of the important position they hold in society by producing edible products) will be like a fulcrum of the society and the rest will revolve around them.

32. ஆற்றங்கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே- ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

■ ஔவையார் - நல்வழி - வெண்பா -12

பதவுரை :

ஆற்றங்கரையில் ஆற்று நீரை உட்கொண்டு வளமுடன் இருந்த மரமும், ஒரு நாள் விழுந்து விடும். அரசனே எண்ணிப் பார்க்கும்படி பெருமிதத்தோடு வாழ்ந்த வாழ்வும் ஒரு நாள் விழுந்து விடும். ஆகவே உழவுத்தொழிலை செய்து, அதன் விளைச்சலை உண்டு வாழ்தலே பெருமை. இதற்கு ஒப்பான வாழ்வு வேறு எதுவும் இல்லை. வேறு எந்த பணியாக இருந்தாலும், அதற்குப் பழுது உண்டு.

Even big trees on the banks of a river will fall one day, just like persons well recognized by a king may eventually come to a naught; but a farmer will always flourish and lead a dignified life.

33. கிளைஞர்க்கு உதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கண் போற்றான் உழவும் இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும், இம்மூன்றும்
உள்ளன போலக்கெடும்.

■ நல்லாதனார் - திரிகடுகம் - வெண்பா - 59

பதவுரை : சுற்றத்தாருக்கு உதவாத செல்வமும், விளையும் காலத்தில் செய்யாத உழவுத் தொழிலும், கள்ளுண்பவன் குடிப்பிறப்பும் ஆகிய இம்மூன்றும் நிலையில்லாது அழியும்.

The following three are sure to take one to the path of decline and destruction.

1) Amassing wealth without helping relatives. 2) Failing to do farming operations at the right time, and 3) Alcoholic addiction.

34. சீரைத்தேடின் ஏரைத்தேடு.

-- ஔவையார் - கொன்றை வேந்தன்-29

பதவுரை : புகழோடு வாழ விரும்பினால் பயிர்த் தொழிலில் ஈடுபட வேண்டும்.

Agriculture is a sure way to success and fame (in life).

35. குளம் தொட்டு, காவு பதித்து, வழி சீத்து
உளம் தொட்டு உழுவயல் ஆக்கி, வளம் தொட்டுப்
பாகுபடும் கிணற்றோடு என்று இவை பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கம் இனிது.

■ சிறுபஞ்சமூலம் - வெண்பா - 64

பதவுரை : குளம் வெட்டுதல், மரம் நடுதல், மக்கள் நடக்கும் வழி உண்டாக்குதல், தரிசு நிலத்தைக் கழனியாக்குதல், கிணறு தோண்டுதல் இவைகளை செய்தவன் சுவர்க்கம் செல்வான்.

Following acts will ensure heavenly ascendence : creating a tank (for storing water), planting trees, paving roads, converting barren to fertile land and digging wells for water.

## 7. இல்லறம் (Family Life)

36. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

- திருக்குறள்:49

பதவுரை : அறம் என்று சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும். அதுவும் மற்றவர் பழிக்கும் குற்றம் இல்லாமல் விளங்கினால் மேலும் நன்மையாகும்.

A happy family life is the bed rock of every society; if such a family is appreciated by all, it is all the more better.

37. நல்விருந்து ஓம்பலின் நட்டாளம்; வைகலும்
இல் புறஞ்செய்தலின் ஈன்ற தாய் - தொல்குடியின்
மக்கள் பெறலின், மனைக்கிழத்தி, இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன்.

- திரிகடுகம் - வெண்பா -64

பதவுரை : விருந்தினரை உபசரித்தலால் நட்பானவள் ஆவாள். இல்லறத்தைக் காப்பதால், பெற்ற தாய் ஆவாள். மக்களைப் பெறுதலால் மனையாள் ஆவாள். இம்மூன்றும் கற்புடைய பெண்களின் கடமையாகும்.

Being a good hostess, she is a good friend. As she looks after the welfare of the family members, she is considered a kind-hearted woman. Giving birth to children makes her a good mother. Such is the world of chaste woman.

38. கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்றுண்டாயின்
எல்லாரும் சென்றங்கெதிர் கொள்வர் – இல்லானை

இல்லாளும் வேண்டாள்; மற்றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாது அவன் வாயிற் சொல்.

- ஔவையார் - நல்வழி - 34

பதவுரை : கையிலே பொருள் வைத்திருப்பவன் ஆயின், அவன் கல்வி அறிவு இல்லாதவன் ஆனாலும், அவனை எல்லோரும் எதிர்கொண்டு வரவேற்பர். கையில் பொருள் இல்லாத ஏழையாக வாழ்ந்தால், அவனை மனைவியும், பெற்ற தாயும் கூட, மதிக்க மாட்டார்கள். அவன் வாயிலிருந்து வரும் சொற்கள் செல்லா காசு போல ஆகிவிடும்.

A wealthy person even if illiterate will be honoured; whereas, a poor man will not be liked by his wife and even mother. His words will carry no weight.

39. மனைக்கு விளக்கம் மடவார் மடவார்
தனக்குத் தகைசால் புதல்வர் மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்,
ஓதிற் புகழ்சால் உணர்வு.

- நாண்மணிக்கடிகை-வெண்பா-105

பதவுரை : வீட்டுக்கு ஒளி மனைவி; மனைவிக்கு அழகு நன் மக்கள்; நன்மக்களுக்கு அழகு கல்வி; கல்விக்கு விளக்கு மெய்யுணர்வு.

Wife is the light of the family. Good children bring happiness to mother. Education is a source of joy for children, and enlightenment is the hall mark of education.

40. இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

- ஔவையார்-மூதுரை, வெண்பா-21

பதவுரை : மனைவி வீட்டில் இருந்தால் கணவனுக்கு இல்லாத பொருள் ஒன்றுமே இல்லை. எல்லாம் அவளாக இருந்து பயன்படுவாள். அந்த மனைவி பண்பு இல்லாதவளாக இருந்தால், எதற்கெடுத்தாலும் முரண்பாடாகவே பேசிக் கொண்டிருந்தால் அந்த நிலையில் அவன் வாழும் வீடு, புலி பதுங்கியிருக்கும் புதராக மாறி விடும்.

A good wife will fulfill all the requirements of a family life. Conversely, if she is uncouth, the family life will be like living with a tigress.

(See Kural 890; உடம்பாடு இலாதவர் வாழ்க்கை , குடங்கருள்
பாம்போடு உடன் உறைந் தற்று

### 8. உதவி (Help)

41. உதவி வரைத்தன்று உதவி, உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

- திருக்குறள் - 105

பதவுரை : கைம்மாறாக செய்யும் உதவி, முன் செய்த உதவியின் அளவை உடையது அன்று. அந்த உதவி, உதவியை பெற்றவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாகும்.
The value of the assistance rendered by a virtuous man, to a needy person, is valued by the nobility and use fulness to the recipient.

42. உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந்தா அங்கு - அறப்பயனும்
தான் சிறிதாயினும் தக்கார் கைப்பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

- நாலடியார்-வெண்பா-38

பதவுரை :

ஆலமரத்து விதை சிறியதாக இருந்தாலும், நிழல் தரும் மிகப்பெரிய மரமாக வளரும். அதுபோல் நல்லவர் ஈட்டிய செல்வத்தை சிறிது பெற்றாலும், பொருளை பெற்றவர் தகுதியைப் பொறுத்து, தானமாகப் பெற்ற செல்வம் வான் அளவுக்குப் பெருகும்.
The banyan seed though small grows to a mighty tree providing ample shade. Likewise help from a virtuous per son, received by a worthy, though small, will multiply mani fold. (Similar view is expressed in chhandogya-Upanishad - Sama Veda book).

43. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்

வானகமும் ஆற்ற லரிது.

- திருக்குறள் - 101

பதவுரை : தான் ஒரு உதவியும் முன்பு செய்யாதிருக்கப் பிறன், தனக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும், அந்த உதவிக்கு ஈடாகாது.

Unexpected help from unknown person is incompara ble, and no amount of praise will compensate such a help.

## 9. அடக்கம் (Humbleness)

44. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

- திருக்குறள் - 125

பதவுரை : பணிவுடையராக இருத்தல் பொதுவாக எல்லோர்க்கும் நல்லதாகும். அவர்களுள், சிறப்பாகச் செல்வர்க்கு அடக்கம், மற்றொரு செல்வம் ஆகும்.

Humility is an asset; particularly, it is an extra asset even to a wealthy person.

45. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

- திருக்குறள் - 127

பதவுரை : காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்கா விட்டாலும், நாவையாவது காக்க வேண்டும். அவ்வாறு காக்கத் தவறினால், சொல் குற்றத்தில் அகப்பட்டுத் துன்பப்படுவர்.

Appropriate speech is important, lest one is likely to give improper speech and suffer adverse consequences thereof.

46. அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா -மடைத் தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

- ஔவையார்-மூதுரை-வெண்பா-16

பதவுரை :

தன்னடக்கத்துடன் இருப்பவரைப் பார்த்து, இவர் அறிவில்லாதவர், என்று எண்ணி அவரை வெல்ல நினைக்கக் கூடாது. நீர் பாயும் மடை வாயிலில் சிறிய மீன்கள் ஓடும்போது வாட்டத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் கொக்கு, பெரிய மீன் வந்ததும் கௌவிக்கொள்வது போன்றது, வலிமை உடையவரின் அடக்கம் என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

Humble and simple behaviour does not mean a per son is useless. A stork is known to wait patiently to pick up a large fish from the stream; similar is the behaviour of a competent person who is otherwise calm and composed.

47. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.

- திருக்குறள் - 126

பதவுரை: ஒரு பிறப்பில், ஆமை போல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அது அவனுக்கு ஏழு பிறப்பிலும் பாதுகாக்கும் சிறப்பு உடையது.

If one exercises control over his five senses like a tortoise, he will enjoy a good life in this birth and also in future births.

## 10. ஈகை (Charity)

48. வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

- திருக்குறள் - 221

பதவுரை : வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படும். மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது.

Charity is that which reaches the poor and the needy. Charity to well-to-do has the underlying meaning of expecting something in return and hence not counted as charity.

49. ஏற்றகைம் மாற்றாமை என்னானும் தாம்வரையார்
ஆற்றாதார்க்கு ஈவதாம் ஆண்கடன் - ஆற்றின்

தண்சேர்ப்ப மாறிவார்க் கீதல்
பொலிகடன் என்னும் பெயர்த்து.

- நாலடியார் - வெண்பா -98

பதவுரை : வறுமை காரணமாக, கை நீட்டி ஒருவர் உதவி கேட்டால், அவருக்கு மறுக்காமல் உதவி செய்வது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். பெற்ற உதவியை ஒருவர் திரும்பச் செய்ய இயலுமானால், அது அவருக்குக் கடன் கொடுத்தல் போன்றது.
Give to him who cannot recompense you. A gift to those who can return the same in kind is like an investment. It is the duty of a man to help the needy person who seeks help.

## 11. பொருள் - செல்வம் (Wealth)

50. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

- திருக்குறள் - 226

பதவுரை : ஏழைகளின் வயிற்றுப்பசியை தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவர் அப்பொருளைத் தனக்கு பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.
Alleviating hungry of the poor is a sure way to invest your wealth.

51. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

- திருக்குறள் - 247

பதவுரை : பொருள் இல்லார்க்கு இவ்வுலக வாழ்க்கை பயன் இல்லாதது போல, பிற உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர் களுக்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லை.
One can not enjoy life on earth without wealth, and one can not enjoy a heavenly future if there is no benediction.

52. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டுங்கு
ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்

பாவிகாள் அந்தப்பணம்.

- ஔவையார்-நல்வழி-22

பதவுரை : மிகவும் சிரமப்பட்டு தேடிய பணத்தை செல்வத்தை), யாருக்கும் கொடுக்காமல் மறைத்து வைத்திருக்கும் கேடுகெட்ட மனிதர்களே கேளுங்கள், நீங்கள் இறந்த பிறகு அச்செல்வத்தை யார்தான் அனுபவிப்பார்கள்?

You senseless people, who hide your wealth, have no idea as to who will enjoy such hidden wealth after your death; so, don't do it.

53. இல்லாரை எல்லோரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

- திருக்குறள் - 752

பதவுரை :

பொருள் இல்லாதவரை வேறு நல்ல குணங்கள் இருந்தாலும், எல்லோரும் இகழ்வர். செல்வரை வேறு நல்ல குணங்கள் இல்லாவிடினும் எல்லோரும் சிறப்பு செய்வார்.

Poverty stricken man will be treated with disrespect even if he has some good traits; but, wealthy will be looked upon with courtesy, even if found to be a tainted man. (Generally, emphasis is given to wealth and not to character)

54. இன்னாமை வேண்டின் இரவு எழுக! இந்நிலத்து
மன்னுதல் வேண்டின், இசை நடுக! தன்னொடு
செல்வது வேண்டின், அறம் செய்க! வெல்வது
வேண்டின், வெகுளி விடல்.

- நான்மணிக்கடிகை - வெண்பா-15

பதவுரை : ஒருவன் தனக்கு இழிவு வரவேண்டுமானால் பிறரிடம் கையேந்த வேண்டும். இந்நிலத்தில் நிலைத்து நிற்க வேண்டுமானால், புகழ் உண்டாகும்படியான செயல்களைச் செய்ய வேண்டும் தான் இறந்தபிறகு தன்னுடன் துணைவர வேண்டுமானால், தருமம் செய்ய வேண்டும். பிறரை வெற்றி கொள்ள வேண்டுமானால் கோபத்தை விட வேண்டும்.

Begging will bring insult to self. One must do something worthy to establish himself in society. One must live dharmic life to ascend the path to heaven and shed anger if he wants to win over others.

## 12. இறப்பு (Death)

55. உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

- திருக்குறள் - 339

பதவுரை : இறப்பு எனப்படுவது ஒருவருக்கு உறக்கம் வருதலைப் போன்றது, பிறப்பு எனப்படுவது, உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

Death is like sleep, birth is like awakening from sleep.

56. இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

- திருக்குறள் - 310

பதவுரை : சினத்தில் அளவு கடந்து சென்றவர் இறந்தவரைப் போன்றவர். கோபத்தை அடியோடு துறந்தவர் துறவிகளுக்கு ஒப்பாவர்.

A sense of extreme anger is like death and those who are adept in controlling anger are comparable to saints.

## 13. ஊழ்வினை முன்வினை ( Karma)

57. பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம்.

- திருக்குறள் - 376

பதவுரை : ஊழால் தமக்கு உரியவை அல்லாத பொருட்களை வருந்திக் காப்பாற்றினாலும் நில்லாமல் போகும், தமக்கு உரியவை கொண்டு போய்ச் சொரிந்தாலும் போகாது.

Fate will decide destiny. It can ensure good tidings and take away the same at will.

58. உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா
பெறற்பாலனையவும் அன்னவாம் மாரி
வறப்பின் தருவாரும் இல்லை அதனைச்
சிறப்பின் தணிப்பாரும் இல்.

- நாலடியார்-வெண்பா-104

பதவுரை : ஞானிகள் கூட தங்கள் உடலுக்கு ஏற்படும் நோய்களை, முன்கூட்டியே வராமல் தடுக்க முடியாது. விதிப்படி நடப்பது எல்லாம் நடக்கும். வறட்சி காலத்தில் நமக்கு யாரும் மழை பெய்விக்க முடியாது. அதிகமான மழை பெய்தால் அதனை யாரும் தடுக்கவும் முடியாது.

Not even saints can drive away predestined ills and everything happens according to some design (fate). In time of drought nobody can bring the rain. Nobody can check the rain when it falls in abundance.

59. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

-- கொன்றை வேந்தன்-74

பதவுரை :

ஒருவர் பிறருக்குச் செய்யும் புண்ணிய, பாவ காரியங்கள் பிரிதொரு சமயத்தில் அவருக்கே மீண்டும் திரும்பக் கிடைக்கும்.

You reap what you sow.

60. வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின் என்றால் போகா- இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைத்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

- ஔவையார் - நல்வழி வெண்பா - 5

பதவுரை :

வருத்தப்பட்டு முயன்று அழைத்தாலும், நமக்குச் சேர வேண்டியவை அல்லாதன நமக்கு வந்து சேர்வதில்லை. நம்மிடம் வந்து பொருந்த வேண்டியவை, நம்மைவிட்டுப் போக வேண்டும் என்றாலும் போவது இல்லை. அப்படியிருக்கும் போது ஒன்றை அடைய வேண்டும் என்ற ஏக்கத்தோடு நெஞ்செல்லாம் புண்ணாகும்படி, நெடுங்காலம் திட்டமிட்டுக் கொண்டிருந்து சாவதே மாந்தர்களின் தொழிலாகப் போய்விட்டது.

Despite all your efforts, you shall get only what's due to you, similarly, whatever is destined that will happen. This being the law of nature, (karma) people keep on craving for things and suffer all along the life.

61. அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே! விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே; விம்மி விம்மி இரு
கைத்தலம் மேல்வைத்து அழும் மைந்தரும் சுடுகாடு மட்டே!
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே!

- பட்டினத்தார் பாடல் மதுரை. பொதுபாடல் - எண்-13

பதவுரை : பாடுபட்டுத் தேடிய செல்வமும், செறுக்கான வாழ்வும் வீட்டோடு முடியும். மனைவி முதலான வீட்டுப் பெண்கள் வீதிவரை தான் வருவார்கள். இறந்தவரை நினைத்து அழும் பெற்ற மகனும், சுடுகாடு வந்து எரியேற்றுவதோடு சரி. ஒருவர் இறந்தபின் அவர் ஆன்மா தனியாக செல்லும் போது துணையாக வருவது, அவர் செய்த புண்ணிய பாவங்கள் மட்டுமே.

A comfortable life ends at home; wife and other folks will give company till your body hits the road; mourning son will accompany your body till the cremation ground; after your funeral what follows your soul will be your own karma (good and bad)

62. அரைசியல் பிழைத்தோர்க்கறங் கூற்றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
யாம் ஓர் பாட்டுடைச் செய்யுளென ...

- சிலப்பதிகாரம் - வரிகள் 55 முதல் 60 வரை

பதவுரை : அரசர் முறை செய்தலிற் சிறிது வழுவினும் அவர்க்கு அறக்கடவுளே கூற்றமாகும் என்பதும்; கற்புடைய பெண்களை, மக்கள், தேவர், முனிவர் முதலானவர்களும் ஏத்துதல் இயல்பு என்பதும்; முன்செய்த தீவினை உருக்கொண்டு வந்து தன் பயனை நுகர்விக்கும் என்பதும், சிலம்பு காரணமாகத் தோன்றியவாதலின் சிலப்பதிகாரம் என்னும் பெயருடன் ஒரு காப்பியமாக நாம் அம்மூன்றுண்மைகளையும் நிறுத்துதும்.

When a king makes a mistake, he will incur the wrath of dharma; chaste women are held in high esteem by people, sages and angels;past karma will revisit everybody, the Tamil classical work "Silappathikaram" amply narrates all these aspects of life.

63. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

- திருக்குறள் - 377

பதவுரை : ஊழ் ஏற்படுத்திய வகையல்லாது முயன்று, கோடிக்கணக் -கான பொருள்களை சேர்த்தவர்க்கும் அவற்றை அனுபவிக்க முடியாது.
If one acquiries wealth by ill-gotten means, he cannot enjoy the fruits of such wealth.
குற்றம் (Fault, Crime, Error)

64. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழி நாணுவார்.

- திருக்குறள் - 433

பதவுரை : பழி நாணுகின்ற பெருமக்கள் தினையளவாகிய சிறு குற்றம் சேர்ந்தாலும், அதனைப் பனையளவாகக் கருதி, குற்றம் செய்யாமல் காத்துக்கொள்வர்.
Scholars will feel guilty even if they commit small acts of error.

65. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

- திருக்குறள் - 1025

பதவுரை : குற்றம் இல்லாதவனாய்த் தன்குடியை உயர்த்துவதற்கான செயல் செய்து வாழ்கின்றவரை, உலகத்தார் சுற்றமாக விரும்பிச் சூழ்ந்து கொள்வார்கள்.
Society will praise those who do things which are beneficial to the upliftment of the people.

66. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை .
-- ஔவையார் - கொன்றை வேந்தன் - 18

பதவுரை : பிறர் குற்றங்களையே ஆராய்ந்து கொண்டிருந்தால், சுற்றத்தார் என்று எவருமே ஒருவருக்கு இருக்கமாட்டார்கள்.

If you are looking for unblemished character, then there can be no long-lasting relationship.

### 15. முயற்சி (Effort)

67. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

- திருக்குறள் - 1023

பதவுரை : என் குடியை உயரச் செய்வேன் என்று முயலும் ஒருவருக்கு ஊழ் - தெய்வம் ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு, தானே முன்வந்து உதவி செய்யும்.

If you want to uplift the family, help will come from all including God.

68. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

- திருக்குறள் - 596

பதவுரை : ஒருவர் எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும். அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு உயர்வாவதைப் பற்றிய எண்ணத்தை விடக்கூடாது.

Aim for bigger achievements; even if not achieved, there will be a satisfaction that you have tried to achieve a big target/ goal.

69. இன்பம் விழையான் வினைவிழையான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

- திருக்குறள் - 615

பதவுரை : தனது இன்பத்தை விரும்பாமல், மேற்கொண்ட செயலை முடிக்க விரும்புகின்றவன், தன் சுற்றத்தாரின் துன்பத்தைப் போக்கித் தாங்கும் தூண் ஆவான்.

Those who don't practice hedonism will be a pillar of strength to the relatives.

### 16. உறவு (Relationship)

70. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்.

- திருக்குறள் - 525

பதவுரை : பொருள் கொடுத்தலும் இன்சொல் கூறுதலுமாகிய இரண்டும் செய்ய வல்லவனானால் ஒருவன் தொடர்ந்து சுற்றத்தால் சூழப்படுவான்.
Charity and pleasing manners will keep one's relatives around forever.

71. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு

- திருக்குறள் - 882

பதவுரை : வாளைப்போல் வெளிப்படையான பகைவர்க்கு அஞ்ச வேண்டியதில்லை. ஆனால் உறவினரைப்போல இருந்து, உட்பகை கொண்டவனின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.
Don't be afraid of a known enemy; but beware of those who pose as relatives but have ulterior designs (motives).

72. அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வர் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

- ஔவையார் - மூதுரை - வெண்பா - 17

பதவுரை : நீர்வற்றிப்போன குளத்தை விட்டு, நீர் பறவைகள் நீங்கி விடும். அதுபோலத் துன்பம் வந்த காலத்தில் விலகிப் போய் விடுபவர் உறவினர் ஆக மாட்டார். நீர் அற்றுப்போனாலும் அந்தக் குளத்தில் கொட்டி, ஆம்பல், நெய்தல் போன்ற பூக்கொடிகள் ஒட்டிக் கொண்டிருப்பது போலத் துன்பம் வந்த காலத்திலும் துணை நின்று உதவுபவரே உறவினர் ஆவார்.
Birds will desert dry water bodies; similarly those who leave us while we experience problems are not real rela tives. Per contra, even in the midst of troubled times some people will stick around to help and they are the real rela tives - just like some flowers thrive even in dry water tanks.

73. அழன்மண்டு போழ்தின் அடைந்தவர் கட்கெல்லாம்
நிழன்மரம் போல் நேரொப்பத் தாங்கிப்-பழுமரம் போல்
பல்லார் பயன்துய்ப்பத் தான் வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

- நாலடியார் வெண்பா-202

பதவுரை : முயற்சியால் வருந்துகிற உறவினர் பலரையும் பாதுகாத்தலே ஆண்மையை உடையவனுக்குரிய கடன், வெப்பம் அதிகமாக உள்ள போது ஒரு மரம் நிழலைத் தந்து உதவுகிறது. மேலும் அந்த பழுத்த மரம் தனது பழங்களை பலருக்கும் கொடுத்து உதவுவது போல, பெற்ற பொருளை பிறருக்கு கொடுத்து உதவுவது தான், நல்ல ஆண்மகனின் கடமையாகும்.

A man with humane qualities will protect those (relatives) who struggle in life. Compare this with a tree which provides shade under the hot sun and bear fruits without expecting anything in return. That's the real spirit of a good human being.

## 17. நட்பு (Friendship)

74. மருவுக மாசற்றார் கேண்மை ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

- திருக்குறள் - 800

பதவுரை : ஒருவர் குற்றமற்றவருடைய நட்பைக் கொள்ள வேண்டும். ஒத்த பண்பு இல்லாதவருடைய நட்பை, ஒன்றைக் கொடுத்தாவது கைவிட வேண்டும்.

Friendship with persons having unblemished character is good. Should avoid at all costs friendship with bad people.

75. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

- திருக்குறள் – 788

பதவுரை : உடைநெகிழ்ந்தவனுடைய கை உடனே உதவி, மானத்தைக் காப்பது போல் தனது நண்பருக்கு துன்பம் வந்த காலத்தில் உடன் சென்று அவருடைய துன்பத்தை நீக்குவதற்கு உதவுவது தான் நட்பு.

Real friendship is like a hand involuntarily reaching to tie a loosening garment (Dhoti). So also one must reach out to help a friend in need (distress). ["A friend in need is a friend indeed")

76. தோழனோடும் ஏழைமை பேசேல்.

-- ஔவையார் கொன்றைவேந்தன்-47

பதவுரை : ஒருவர் தன் வறுமையைப் பற்றி நெருங்கிய நண்பர்களிடத்தில் கூட பேசக்கூடாது.

Never discuss your poverty even with a friend. (when you laugh, everyone laughs with you; when you cry, you cry alone)

77. சாக்காடு, கேடு, பகை, துன்பம், இன்பமே
நாக்கு ஆடு நாட்டு அறைபோக்கும், என நாக்காட்ட
நட்டார்க்கு இயைியின் தமக்கு இயைந்த கூறு , உடம்பு
அட்டார்வாய்ப் பட்டது பண்பு.

- ஏலாதி - வெண்பா -79

பதவுரை : இறப்பும், கேடும், துன்பமும், பகையும், நண்பர்களுக்கு வந்தால் அதனைத் தனக்கு வந்ததாகக் கருதுபவனே சிறந்த நண்பனாவான்.

A real friend will feel as if he is hurt when his friend suffers pangs of death, troubled times and enmity (with others).

78. யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.
நாலடியார் - வெண்பா - 213

பதவுரை : யானையின் குணத்தினைப் போன்ற மனிதர்களுடன் நட்பு கொள்ள வேண்டாம். நாயின் குணத்தை உடைய மனிதர்களுடன் கொண்ட நட்பினை உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் யானை நீண்ட நாட்களாக தன்னுடன் இருந்து வரும் பாகனையே கொன்றுவிடும். ஆனால் நாய், தன் உடலில் ஈட்டி பாய்ந்திருந்த நிலையிலும் தனது எஜமானரைப் பார்த்து வாலை ஆட்டும்.

Avoid friendship with those who resemble the elephant; embrance and hold fast friendship with those who are like the dog; for the elephant will slay even its keeper (mahout) though it has known him for long, but the dog will wag its tail when it has in its body the javelin.

79. தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்து இருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் - இம்மூவர்
கேள் ஆக வாழ்தல் இனிது.

- திரிகடுகம் - வெண்பா-12

பதவுரை : முயற்சி உடையவன் கடன்படாது வாழ்வான்; உதவி செய்பவன், விருந்தினர் பசித்திருக்க உண்ணாதவன்; பிறர் காரியங்களை அறிபவன் கேட்டவற்றை மறவாதவன், இம்மூவருடனும் நட்பு கொள்ளுதல் நன்மை தருவதாகும்.

Energetic and enterprising person will not become a borrower; a good host will not eat while his guest is waiting; a good listener will not forget the demands of a friend. Friend ship with such people is always a virtue.

80. அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளவாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே; சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்

- ஔவையார் - மூதுரை - வெண்பா-4

பதவுரை : காய்ச்சினாலும் பால் சுவை குன்றாது. அதுபோல நல்ல நண்பர்கள் நட்பால் துன்பம் அடைந்தாலும் விலக மாட்டார்கள். நல்ல நட்பு இல்லாதவர்கள் துன்பம் வரும் காலத்தில் மாறிவிடுவர். வெண்மையான சங்கு சுட்டாலும் சுண்ணாம்பாக மாறி, வீட்டில் அடிக்கும்போது வெள்ளை நிறத்தையே தரும். அதுபோல வறுமையில் வாடினாலும் மேன்மக்கள் மேன்மக்களாகவே திகழ்வார்கள்.

Boiling doesn't make milk tasteless. Similarly, good friends will not desert you in troubled times. Sea shells even after heating will retain their whiteness. (and used for

white wash) Similarly, even when poverty reduces one's material wealth, noblemen will remain noble.

## 18. பகை (Enmity)

81. வில்லேருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை.

- திருக்குறள் - 872

பதவுரை : வில்லை ஏராக உடைய உழவராகிய வீரருடன் பகை கொண்ட போதிலும், சொல்லை ஏராக உடைய உழவராகிய அறிஞருடன் பகை கொள்ளக்கூடாது.
One can fight openly with a soldier; but never pick up a quarrel with scholars. (The pen is mightier than the sword).

82. புகை வித்தாப் பொங்கு அழல் தோன்றும் சிறந்த
நகை வித்தாத்தோன்றும் உவகை; பகை, ஒருவன்
முன்னம் வித்து ஆக முளைக்கும்; முளைத்தபின்
இன்னா வித்து ஆகிவிடும்.

- நாண்மணிக்கடிகை - வெண்பா-30

பதவுரை : புகையின் காரணமாக நெருப்பு உணரப்படும். முகமலர்ச்சியின் காரணமாக மனமகிழ்ச்சி உணரப்படும். செய்யும் செயல்களில் பகைமை வெளிப்படும். பகைமை உணர்ந்தபின் அதன் காரணமாகத் துன்பங்கள் உண்டாகும்.
Smoke indicates presence of fire. A smile unfolds genuine happiness. Our actions reveal enmity and that will trigger bad tidings (See : அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.)

83. பகைமுன்னர் வாழ்க்கை செயலும் தொகைநின்ற
பெற்றத்துள் கோலின்றிச் சேறலும், முற்றன்னை
காய்வானைக் கைவாங்கிக் கோடலும் - இம்மூன்றும்
சாவ உறுவான் தொழில்.

- திரிகடுகம் - வெண்பா – 4

பதவுரை : பகைவருக்கு முன்னே தன் செல்வத்தைக் காட்டுவதும், மாட்டு மந்தையில் கோல் இல்லாமல் செல்வதும், பகைவரோடு நட்பு பாராட்டுவதும் ஆகிய மூன்றும், கெடுதியை உண்டாக்கும்.

The ultimate result of the following is bound to be disas trous; namely, bragging about one's wealth to the adversary, walking among the cow herd without a cane, and having friendship with adversary.

84. நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு - நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத்தவர்.

- ஔவையார்-மூதுரை - வெண்பா- 25

பதவுரை : நாகப்பாம்பு தனக்குள் நஞ்சு இருப்பதை தெரிந்து கொண்டு தன்னை மறைத்துக் கொண்டு வாழும். அதுபோல நெஞ்சில் வஞ்சகம் இருப்பவர்கள் வெளிப்படையாக பேச மாட்டார்கள். தண்ணீர் பாம்புக்கு நஞ்சு இல்லை. எனவே அது வெளிப்படையாக நீரில் மிதந்து தெரியும். அதுபோல நெஞ்சில் வஞ்சகம் இல்லாதவர்கள் வெளிப்படையாக பேசுவர்.

Cobra will reside and move stealthily; similarly, cunning and shrewd persons will act in an opaque manner. Water snake is not poisonous but moves around freely in water bodies, like innocent persons who talk and behave in a transparent manner.

## 19. பிறப்பு (Birth)

85. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

- திருக்குறள் - 972

பதவுரை : எல்லா உயிர்க்கும் பிறப்பு பொதுவானது. ஆயினும், செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை .

All are equal by birth; name and fame will come suo-motu depending on your achievements in life.

86. புண்ணியம் ஆம் பாவம் போல் போனநாள் செய்த அவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் - எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை, எச்சமயத்தோர் சொல்லும்
தீதொழிய நன்மை செயல்.

- ஔவையார் - நல்வழி - வெண்பா-1

பதவுரை : மண்ணில் பிறந்தவர் வைத்திருக்கும் பொருள், போன பிறவியில் செய்த புண்ணியம் பாவம் என்னும் இரண்டே ஆகும். இதைத்தவிர வேறு இல்லை என்று எல்லா சமயங்களும் கருதிப்பார்த்து சொல்லுகின்றன. எனவே தீமைகளை விலக்கிவிட்டு, நன்மைதரும் செயல்களைச் செய்வோம். அதனால் புண்ணியம் பெருகும், பாவம் போய்விடும். அவை அடுத்த பிறவிக்கு முதலாக அமையும்.

All religions (Faiths) say, that you inherit all your karma (good and bad) from your previous birth, simi larly, what you practice in this birth will pave way for the next birth; so be good and do good.

87. விழுத்திணைத் தோன்றாதவனும் எழுத்தினை
ஒன்றும் உணராத ஏழையும், என்றும்
இறந்துரை காமுறுவானும் - இம்மூவர்
பிறந்தும் பிறவாதவர்.

- திரிகடுகம் - வெண்பா -92

பதவுரை : சிறந்த குலத்தில் பிறவாதவனும், இலக்கண நூலை அறியாதவனும், முறையில்லாமல் பேசுபவனும் ஆகிய இம்மூவரும் மக்களாகப் பிறந்தாலும் மக்களாக மதிக்கப்பட மாட்டார்கள்.

The following three will not be recognized as human beings; namely, a person who is not brought up well, an illiterate and anyone who blabbers uncontrollably.

88. எள்ளற்க என்றும் எளியர் என்று! என் பெறினும்
கொள்ளற்க, கொள்ளார் கைமேற்பட! உள்சுடினும்
சீறற்க, சிற்றில் பிறந்தாரை! கூறற்க
கூறல்லவற்றை விரைந்து!

- நான்மணிக்கடிகை - வெண்பா -1

பதவுரை : எவரையும் எளியவர் என்று எண்ணி இகழ்ந்து விடாதே. மிகச்சிறந்த பொருளாக இருந்தாலும் தகுதியற்றவர்களிட -மிருந்து பெற்றுக் கொள்ளாதே. செய்யக்கூடாதவற்றைச் செய்தாலும் ஏழை மக்களிடம் கோபம் கொள்ளாதே. சொல்லத் தகாத சொற்களைக் கோபத்திலும் கூறிவிடாதே.

Don't denigrate the poor; don't receive gift of any kind from unknown persons; and don't get angry and scold the poor.

## 20. இளமை (Youth)

89. இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்,
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினம் குற்றம்; குற்றம்
தமரல்லார் கையகத்து ஊண்.

- நாண்மணிக்கடிகை - வெண்பா - 91

பதவுரை : இளமை பருவத்தில் கல்லாமை குற்றம், செல்வ வளம் இல்லாத போழ்து வள்ளல் தன்மையுடன் நடத்தல் குற்றம். உறவினர் துணையில்லாத போழ்து பிறரிடம் கோபப்படுதல் குற்றம், உள்ளன்பு இல்லாதவர்களிடம் உணவு பெற்று உண்பது குற்றம்.

The following four traits are bad; namely, ignoring studies at young age; being charitable when one is poverty stricken; anger when you don't have relatives around, and taking food from those who are not affectionate towards you.

90. முந்தை எழுத்தின் வரவு உணர்ந்து, பிற்பாடு
தந்தையும் தாயும் வழிபட்டு, வந்த
ஒழுக்கம் பெருநெறி சேர்தல், இம்மூன்றும்
விழுப்ப நெறி தூராவாறு.

- திரிகடுகம்-வெண்பா -56

பதவுரை : இளமை பருவத்தில் கற்பதும், தந்தையையும் தாயையும் போற்றி வணங்குவதும், பெரியோர்களைச் சேர்வதும் உயர்ந்த நெறியாகும்.

The following three qualities are commendable; namely, learning during youthful years, respect one's par ents and keep company of respected persons.

91. கற்றது ஒன்று இன்றிவிடினும் கருமத்தை
அற்றம் முடிப்பான் அறிவுடையான், உற்று இயம்பும்
நீத்த நீர்ச்சேர்ப்ப! இளையோனே ஆயினும்
மூத்தானே, ஆடு மகன்.

- பழமொழி நானூறு-வெண்பா-150

பதவுரை : படித்தறிந்தது ஒரு சிறிதும் இல்லையாயினும் தொடங்கிய செயலைச் சோம்பலின்றி, முடிப்பவன் அறிவுடையான் எனப்படுவான். அப்படிப்பட்டவன் இளையவனேயானாலும் அறிவில் முதிர்ந்தவன் எனப்படுவான்.

If an illiterate person after taking up a job completes it successfully, he will be well appreciated. Such a person even if young will be considered a matured man.

## 21. முதுமை (Old Age)

92. ஒரு தலையான் வந்துறூஉம் மூப்பும் புணர்ந்தார்க்கு
இருதலையும் இன்னாப்பிரிவும், உருவினை
உள்உருக்கித் தின்னும் பெரும் பிணியும்; இம்மூன்றும்
கள்வரின் அஞ்சப்படும்.

- திரிகடுகம் - வெண்பா - 18

பதவுரை : உறுதியாக வரும் மூப்பு, நண்பரின் பிரிவு, உடம்பை உருக்குகின்ற தீராத நோய், இம்மூன்றுக்கும் அஞ்சி எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.

We must guard against the consequences of the follow ing namely; old age, separation from a friend, and chronic ailment.

93. உண்பொழுது நீராடி உண்டலும், என் பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும் தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை - இம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில்.

- திரிகடுகம் - வெண்பா - 27

பதவுரை : குளித்தபின் உண்பதும், பொய் சொல்லாமல் இருத்தலும், முதுமையில் தோல்வற்றிச் சுருங்கினாலும் நற்குணங்களில் இருந்து குறையாமையும், ஆகிய இம்மூன்றும் நல்லவர் செயலாகும்.

The following are attributed to noble persons; namely, taking meal after bath; keep away from telling lies, and being a good human being even at ripe old age.

## 22. உண்மை (Truth)

94. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.

- திருக்குறள் - 373

பதவுரை : ஒருவர் நுட்பமான பலவற்றைக் கற்றாலும், முன்வினைக்கு (ஊழிற்கு ஏற்றவாறு, அவருக்கு உள்ள அறிவே மேம்பட்டு நிற்கும்.

Even if a person learns a lot, his intrinsic wisdom inherited from previous birth (karma) will prevail.

## 23. பொய் (Lie)

95. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

- திருக்குறள் - 293

பதவுரை : ஒருவர் தன் மனம் அறிந்து ஒன்றைக் குறித்து பொய் சொல்லக்கூடாது. பொய் சொன்னால், அதைக்குறித்துத் தன் மனமே தன்னை வருத்தும்.

Conscience will hurt a person, if he deliberately lies.

## 24. நல்லவை (Good deeds)

96. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

- திருக்குறள் - 96

பதவுரை : பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிமை உடைய சொற்களைச் சொல்லின், பாவங்கள் தேய்ந்து குறைய, அறம் வளர்ந்து பெருகும்.

There will be all round prosperity if everyone talks to each other good and useful issues.

## 25. *தீயவை* (Bad Deeds)

97. *தீயவை தீய பயத்தலால் தீயவை*
*தீயினும் அஞ்சப்படும்.*

- *திருக்குறள்* - 202

பதவுரை : தீயசெயல்கள் தீமையை விளைவிக்கும் தன்மை உடையது. ஆதலால் அத்தீய செயல்கள் தீயைவிட கொடியனவாகக் கருதி அஞ்சப்படும்.

Bad deeds bring bad results and therefore such bad deeds are feared more than fire.

## 26. பெருமை (Feeling dignified, pride)

98. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்.

- *திருக்குறள்* - 505

பதவுரை : மக்களின் குணங்களாகிய பெருமைக்கும், குற்றங்களாகிய சிறுமைக்கும் தேர்ந்தறியும் உரை கல்லாக இருப்பவை, அவரவருடைய செயல்களே ஆகும்.

A man's deeds are the touchstone of his greateness and pettiness.

## 27. *சிறுமை* (Pettiness)

99. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல்.

- *திருக்குறள்* - 934

பதவுரை : ஒருவனுக்கு துன்பம் உண்டாக்கி அவனுடைய புகழைக் கெடுக்கின்ற சூதைப்போல் வறுமை தருவது வேறொன்றும் இல்லை .

Gambling is harmful. It will spoil one's reputation and bring misery.

## 28. உலகம் (World)

100. ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

- திருக்குறள் - 484

பதவுரை : ஒருவர் செய்யும் செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தை அறிந்து, இடத்தோடு பொருந்துமாறு செய்தால், உலகமே வேண்டும் என்று கருதினாலும் அச்செயல் நிறைவேறும்.

If you factor into account "time and place" to accomplish a job, you can achieve anything in the world.

101. கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.

- திருக்குறள் - 571

பதவுரை : கண்ணோட்டம் (அன்பான இரக்க குணமுள்ள பார்வை) என்று சொல்லப்படுகின்ற மிகச்சிறந்த அழகு இருக்கும் காரணத்தால் தான், இந்த உலகம் அழியாமல் இருக்கின்றது.

Empathy is a wonderful thing. Humanity survives trials and tribulations because of the feeling of empathy - compassion towards one another.

102. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ் வுலகு.

- திருக்குறள் - 336

பதவுரை : நேற்று இருந்தவன் ஒருவன், இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இந்த உலகம்.

Life is all but transient. Some, who were alive yesterday, are no more today. Such is the way of this world.

103. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

- திருக்குறள் - 648

பதவுரை : கருத்துக்களை ஒழுங்காகக் கோர்த்து, இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால், உலகம் விரைந்து

அவருடைய ஏவலைக் கேட்டு நடக்கும்.

The world will listen carefully to those, who can gather their ideas cogently and deliver it in a pleasant manner (A good orator will be listened to)

104. தான்கெடினும் தக்கார்கே டெண்ணற்க தன் உடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க - வான்கவிந்த
வையகமெல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோடிடை மிடைந்த சொல்.

- நாலடியார் - வெண்பா- 80

பதவுரை : தான் கெட்டாலும் நடுவுநிலைமையாளர்களுக்கு கேடு செய்ய எண்ணக்கூடாது. தனது உடலில் உள்ள சதை முழுவதும் பசியால் உலர்வதானாலும், உண்ணத்தகாத உணவை உண்ணக்கூடாது. இவ்வுலகம் முழுவதும் பெறுவதாயினும், பொய் கலந்த சொற்களைச் சொல்லக் கூடாது

Even in adversity one shouldn't harm good people; even when you pass through troubled times like struggling for a meal, don't eat or take help from an unworthy person; don't resort to lie even if you are destined to conquer the world.

(See - புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது)

------------

## விவரங்களைத் தரும் புத்தகப்பட்டியல் (Bibiliography)

**திருக்குறள் : (Thirukkural)**

உலகப்புகழ்பெற்ற தமிழ் இலக்கியமாகும். இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர். உலக இலக்கிய அரங்கில் தமிழரின் பெருமையை உயர்த்திக் காட்டும் சிறப்புடையது. 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும் கொண்டது. இந்த நூல் உலகப்பொதுமறை என்றும் அழைக்கப்படுகிறது. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டது.

**சிலப்பதிகாரம் : (Silappathikaram)**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருள்கள் அடங்கியவை "காப்பியம்" (Epic) எனப்பட்டது. தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்தினையும் தமிழில் தோன்றிய ஐம்பெரும் காப்பியங்கள் எனக்கூறுவர். சிலப்பதிகாரத்தினை இயற்றியவர் இளங்கோவடிகள். காலம் சுமார் 1600 ஆண்டுகளுக்கு முன்பு.

**ஔவையார் : (Avvaiyar)**

ஔவையார் என்ற பெயரில் தமிழகத்தில் ஒரு பெண்பால் புலவர் இருந்துள்ளார். ஆனால் ஔவையார் என்ற பெயரில் நான்கு புலவர்கள் வெவ்வேறு காலக்கட்டங்களில் இருந்திருப்பதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

முதலாவது வாழ்ந்த சங்க கால அவ்வையார் தொண்டை நாட்டு மன்னர் அதியமானுக்கு நல்ல நண்பர். மன்னர் நீண்ட நாள் வாழ வேண்டும் என்றுக் கருதி, நீண்ட நாள் வாழ்வைத் தரும் நெல்லிக்கனியை, மன்னருக்கு கொடுத்தவர்.

இரண்டாவது அவ்வையார் பக்திச்சுவை உடைய நூல்களை இயற்றியவர்.

மூன்றாவது அவ்வையார் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி போன்ற நீதி நூல்களைப் பாடியவர்.

நான்காவது அவ்வையார் மிகச்சிறந்த தனிப்பாடல்கள் மிகுதியாகப் பாடியவர்.

ஔவையார்- மூதுரை : (Awaiyar - Moothurai)

வாக்குண்டாம் பாட்டின் முதல் தொடரால் இந்நூல் இப்பெயர் பெற்றது. மொத்தம் 31 வெண்பாக்கள் உள்ளன.

ஔவையார் - நல்வழி : (Avvaiyar - Nalvazhi)

வாழ்க்கைக்கு நல்ல வழியைக் காட்டும் நூல் என்பதால் இப்பெயர் பெற்றது. 41 வெண்பாக்களைக் கொண்டது.

ஔவையார் - ஆத்திச்சூடி : (Avvaiyar - Aathichoodi)

பாட்டின் முதல் தொடரால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதில் 109 ஒருவரிப்பாடல்கள் உள்ளன. நல்லொழுக்கத்தினை வலியுறுத்தி இப்பாடல்கள் எழுதப் பெற்றது என்று அறியப்படுகிறது.

ஔவையார்- கொன்றை வேந்தன் : (Avvaiyar-Kondraivendhan)

பாட்டின் முதல் தொடரால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதில் 91 அடிப்பாக்கள் உள்ளன.

**நாலடியார் : (Naaladiyar)**

நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாவால் இயற்றப்பட்டதால் நாலடியார் எனப்பட்டது. இந்நூல் சமண முனிவர்கள் நானூறு பேரால் பாடப்பட்டது.

**நான்மணிக்கடிகை : (Nanmanikkatigai)**

நான்மணிக்கடிகை என்பது நான்கு இரத்தின துண்டங்கள் என்னும் பொருளைத் தரும். ஒவ்வொரு பாடலிலும் நான்கு சிறந்த கருத்துக்களைக் கூறுவதால் நான்மணிக்கடிகை என அழைக்கப்படுகிறது. இதனை இயற்றியவர் விளம்பி நாகனார்.

**ஏலாதி : (Elathi)**

ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறு பொருட்கள் சேர்ந்த ஒருவகைச் சூர்ணம் "ஏலாதி" என மருத்துவ நூல்களில் கூறப்பெறும். ஏலாதி நூலும், ஒவ்வொரு பாடலிலும் ஆறு பொருட்களைப் பெற்று, உயிருக்கு உறுதுணையாக அறநெறியை உரைக்கும் நூல். இந்நூலின் ஆசிரியர் கணிமேதாவியார்.

**சிறுபஞ்ச மூலம் : (Sirupanchamoolam)**

சிறுபஞ்சமூலம் என்பது ஐந்து சிறிய வேர்கள் என்று பொருள்படும். சிறுபஞ்சமூலம் ஆகிய மருந்து உடல் நலம் பேணுமாறு போல, இந்த நூலின் பாடல்களில் உள்ள ஐந்தைந்து பொருள்களும் உயிர் நலம் பேணுவன. இந்நூலை இயற்றியவர் காரியாசான் என்பவர்.

**ஆசாரக்கோவை : (Asarakkovai)**

ஆசாரக்கோவை என்பதற்கு ஆசாரங்களைத் தொகுத்த கோவை என்று பொருள் கூறலாம். தினசரி வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய செயல்முறைகளை, பாடல்களாக இயற்றியுள்ளார். இதன் ஆசிரியர் கயத்தூர்ப் பெருவாயின் முள்ளியார்.

**பழமொழி நானூறு : (Palamozhi Naanooru)**

இந்நூலிலுள்ள பாடல்களுள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பழமொழியை அமைத்து, அதற்கு விளக்கம் கூறும் வகையில் ஆசிரியர் பாடியிருப்பதால் நானூறு

பாடல்களைக்கொண்ட இந்நூல் “பழமொழி நானூறு" என்று அழைக்கப்பெற்றது. இந்த நூலின் ஆசிரியர் மூன்றுறை அரையனார்.

**திரிகடுகம் : (Thirikadugam)**

திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்று மருந்துப்பொருட்களை குறிக்கும். மூன்று மருந்து பண்டங்களால் ஆகிய திரிகடுகம் என்னும் மருந்து, உடல்நலம் பேணுவதைப் போன்று, இந்நூலின் பாடல்கள் உயிர் நலம் பேணுவனவாம். இதன் காரணமாக இந்நூல் திரிகடுகம் எனப்பெயர் பெற்றது. இந்நூலின் ஆசிரியர் நல்லாதனார் ஆவார்.

**இனியவை நாற்பது : (Iniyavai Narpathu)**

இந்த நூல் 40 வெண்பாக்களைக் கொண்டது. பூதஞ்சேந்தனார் இயற்றியது.

**இன்னா நாற்பது : (Inna Narpathu)**

ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துக்களைக் கொண்டு, ஒவ்வொன்றையும் இன்னா எனக்கூறுதலின் "இன்னா நாற்பது” எனப்பெயர் பெற்றது. இந்த நூலை இயற்றியவர் கபிலர்.

**பட்டினத்தார் பாடல்கள் : (Saint Pattinathar Songs)**

பட்டினத்தார் என்பவர் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். "காதற்ற ஊசியும் வாராது கடை வழிக்கே” என்ற பொன்னான போதனையை உலகுக்கு உரைத்தவர்.

போலித்தனமும், பொய்மையும், சுயநலமும், நிரந்தரமில்லா சிற்றின்பமும் வாழும் முறைக்கு ஏற்றதல்ல என்ற உண்மையை உணரச்செய்யும் பாடல்களைப் பாடியுள்ளார். இவரது இயற்பெயர் சுவேதாரண்யர். தம்குலவணிகத்தில் பெரும் பொருளீட்டி தலைசிறந்து விளங்கியதால் “பட்டினத்து செட்டியார்" என்றும் “பட்டினத்தார்” என்றும் அழைக்கப்பட்டார்.

----------------------

**பொருள் அகராதி**

அறம் : தருமம், நீதி (Justice) (Charity)

அருள் : கருணை (Kindness)

இரக்கம் (Pity) தயாளகுணம் (Generosity)

அத்தம் : பொருள் (Material) பொன் (Gold)

இருவினை : நல்வினை (Good deed) தீவினை (evil deed) (பாவம், புண்ணியம்)

இசை : புகழ், கூடிநிற்றல், சொல், இசைப்பாட்டு (Fame, assemble, word, music)

இம்மை : இப்பிறப்பு (Present life)

இயைபு : பொருத்தம் (Suitable)

இரவலர் : இரப்போர் (One who begs for something)

இவண் : இவ்விடம் (here)

இருள் உலகம் : நரகம் (hell)

இழுக்கு : ஈனம், கேடு, பொய், மறதி (lowness, harm, lie, forget)

இன்னாமை : தீமை, துன்பம் (bad, unhappy)

இல்லாள் : தலைவி, மனைவி (Female head, wife)

இடுக்கண் : துன்பம் (displeasure)

இடும்பை : தீமை (evil)

ஈகை : ஈதல், பொன், மேகம் (gift, gold, cloud)

ஈதல் : கொடுத்தல், சொரிதல் (give, donate)

ஈனம் : இழிவு, குறைபாடு (lowness, defect)

ஈன்றாள் : தாய் (mother)

உடுக்கை : துணி-ஆடை, இடை சுருங்கு பறை - உடுக்கு . (clothes, percussion instrument)

உபநிடதம் : வேதநுட்பம் (a part of vedas)

உருவு : வடிவு, அச்சம் (appearance, size, Fear)

உவரி : கடல் (Sea)

உள்ளல் : நினைத்தல், உள்ளான் குருவி (think; a kind of bird)

ஊருணி : ஊரடுத்த குளம் (a water body in the midst of a town)

ஊழ் : முன்வினை, தலைவிதி, கர்மா (fate, action over - which one has no control, karma)

ஊதியம் : இலாபம், கல்வி (Profit, education)

ஊண் : இரை, சோறு (Prey, food)

ஊன் : தசை , உடல் (Flesh, human body)

எழுமை : ஏழு பிறப்பு, உயர்ச்சி (Seven rebirths; highly respectable)

ஒழுக்கு : ஒழுகுதல், நீளம், முறையாக நடத்தல் (Leak, Length, behave orderly)

கடன் : கைமாற்றுப் பணம், கடமை (Loan, duty)

கண்ணோட்டம் : இரக்கப்பார்வை, கருணை கொண்ட பார்வை , நாகரிகம் (empathy, gracious demeanour, compassion, civilization)

கட்டளைக்கல் : செங்கல் செய்ய பயன்படும் மர அச்சு - குமரி மாவட்டத்தில் “கட்டளை” எனப்படும். அந்த மர அச்சினால் தயாரிக்கப்படும் செங்கல், கட்டளைக் கல் என்று அழைக்கப்படுகிறது. (Wooden Frame)

கருணை : ஒருவகை கிழங்கு, பொரிக்கறி (elephant yam,mercy, eatable side-dish)

காப்பு : ஆடை, கதவு, காவல், திருநீறு, மதில் (dress, door, security, sacred ash, wall)

கடப்பாடு : ஈகை, முறைமை (gift, obligation)

கேண்மை : உறவு, கண்ணோட்டம் (relation, empathy)

கைம்மாறு : பிரதிபலன் (help rendered in return, requite, recompense)

சகடக்கால் : வண்டிச்சக்கரம் (wheel of a cart)

சாக்காடு : இறப்பு (death)

சால்பு : ஊக்கம், கல்வி, நிறைவு, மேன்மை (encourage, education, completion, respectable, high regard)

சிலம்பு : காலில் அணியும் கொலுசு, தண்டை (anklet)

சொல்லேருழவர் : புலவர், மந்திரி (Poet, Minister)

தக்கார் : உறவோர், பெருமையில் சிறந்தவர் (Great, honorable, virtuous persons)

தம்முன் : தமையன் (brother)

தமர் : உறவோர் (relative)

தாளாண்மை : முயற்சி, ஊக்கம் (effort, encouragement)

திரவியம் : செல்வம் (wealth)

தீது : குற்றம், தீமை (Mistake, fault, harm, mischief)

துஞ்சுவது : உறங்குவது, சோம்பல் (sleeping, laziness)

துய்த்தல் : அனுபவித்தல், சாப்பிடுதல் (enjoyment, eating)

தெங்கு : தென்னை மரம் (coconut tree)

நட்டார் : உறவினர் (relative)

நெடுந்துயில் : சாவு (death)

நெருநல் : முன்னை நாள் (yesterday)

பசும்புல் : பயிர் (plant)

பற்று : அன்பு , ஆசை (affection, ambition)

பதி : மூத்தோன், அரண், கணவன், ஊர், நகரம், வீடு (elder, fort, town, house, husband)

பாகன் : யானையை பராமரிப்பவர் (mahout)

பாவம் : தீங்கான செயல், முகபாவம் (sin, facial expression)

பிணி : கட்டு, துன்பம், நோய் (tie, agony, disease)

பிதா : தந்தை , பெருநாரை (Father, big stork)

போழ்து : காலம் (Time)

மங்கலம் : தருமம், பொலிவு, விவாகம் (Charity, attraction, marriage)

மங்களம் : வாழ்த்து (greeting)

மறுமை : வரு பிறப்பு, அடுத்த பிறப்பு (next birth)

மண்ணுலகு : பூமி (World)

மன்னுக்கு : தேவலோகம் (Heaven)

மூடர் : அறிவில்லார், கீழ்மக்கள் (illiterate)

மூதுரை : பழமொழி (Proverb, maxim)

மெய் : உடல், உண்மை (Body, Truth)

மேலோர் : அறிஞர், புலவர் (Wiseman, Poet)

வகுத்தல் : வகைப்படுத்தல் (classification)

வகுத்தான் : படைத்தவன், கடவுள் (God)

விதி : தலை எழுத்து, கொள்கை (Fate, Principle)

வில்லேருழவர் : படைவீரர், வேடர் (soldier, hunter)

வெகுளி : சினம் (angry)

வெஃகாமை : வேண்டாமை (refusal)

வேண்டாமை : வெறுப்பு (dejection)

வையகம் : உலகம் (world)

\------